**18.07.2020** அன்று சென்னை அயனாவரம் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு இயக்க செயற்குழு கூட்ட நிகழ்வுகள்

வருகை புரிந்தோர்

| வ. எண் | பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | ந.சுப்ரமனியன் | தலைவர் | ஒப்பம் |
| 2. | வி.ஆர்.சந்திரன் | உப தலைவர் | ஒப்பம் |
| 3. | | பொது செயலாளர் | ---- |
| 4. | V.கார்த்திகைராஜன் | தலைமையாக செயலர் | ஒப்பம் |
| 5. | ந.தனசேகர் | நிதி செயலர் | ஒப்பம் |
| 6. | N.சாந்தகுமார் | | ஒப்பம் |
| 7. | G.கோவிந்தசாமி | | ஒப்பம் |
| 8. | J.மனோகர் | | கொரொனாவால் வரவில்லை |
| 9. | V.ஆய்யப்பன் | செயலர் | கொரொனாவால் வரவில்லை |

இயக்க செயற்குழுக்கூட்டம் தலைவர் திரு.ந.சுப்ரமனியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டன.

**1.** திரு.M.இரகுபதி, இயக்கப் பொதுசெயலாளர் மற்றும் திரு.S.S.பீட்டர் கென்னடி, செயலர் (வெளியீடு) அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கள் தெரிவிக்கப்பட்டு அன்னார்களின் ஆன்மா சாந்தியடைய இரண்டு நிமிடங்கள் மவுனம் அனுசரித்து பிரார்த்தனை செய்யப்பட்டது.

**2.** ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் தொலைபேசி எண்.044-26741007-ன் இணைப்பை உடனடியாக இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**3.** தற்போதைய இயக்க அலுவலக கட்டிடத்தைக் காலி செய்ய அதன் உரிமையாளர் கேட்டுக்கொண்டதன் பேரில், அலுவலகத்தைக் காலி செய்வதென தீர்மானிக்கப்பட்டது. இதுகாறும், சுமார் 12 ஆண்டுககளாக, 250 ச.அடிக்கும் கூடுதலான பரப்பு கொண்ட இக்காட்டிடத்தை இலவசமாக இயக்க அலுவலகத்திற்கு கொடுத்திருந்த இயக்க உப தலைவர். திரு..V.R.சந்திரன் அவர்களுக்கு இயக்கத்தின் அனைத்து உறுப்பினர்கள் சார்பாக மனமாந்த நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மாற்று ஏற்பாடு செய்ய நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**4.** தற்போது காலியாகவுள்ள பொதுசெயலாளர் பதவிக்கு, திரு.V.கார்த்திகை ராஜன் ( ஆயுள் உறுப்பினர் எண்.515) அவர்களை அடுத்த தேர்தல் வரை நியமித்து தீர்மானிக்கப்படுகிறது. அவர், தற்போது வகிக்கும் தலைமையக செயலர் பதவியியையும் கூடுதலாக வகிப்பார் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

**5.** இனி வருங்காலங்களில், செயற்குழுக் கூட்டத்தை காணொளி மூலம் நடத்தவும், மாவட்ட நிர்வாகிகள் தலைவர்/செயலர் கலந்துகொள்ள வேண்டவும் தீர்மானிக்கப்படுகிறது.

**6.** இனி வரும் உறுப்பினர் சேர்க்கை படிவங்களை காணொளி மூலம் பார்த்து உடனுக்குடன் உறுப்பினர் சேர்க்கையயை முடிவு செய்யத் தீர்மானிக்கப்படுகிறது.

**7.** கொரோனா காலங்களில், பணி செய்யாமலிருந்த போதும், இயக்க அலுவலக மேலாலருக்கு தொடர்ந்து ஊதியம் வழங்கியதை ஏற்பளித்துத் தீர்மானிக்கப்படுகிறது.

ஒப்பம்
பொதுச்செயலர்

ஒப்பம்
தலைவர்